இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41எ (1) எனும் உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட, அரசியலமைப்புப் பேரவையின் ஏழாவது அறிக்கை

உள்ளடக்கம்

1. அறிமுகம் 1

2. பேரவையின் கூட்டங்கள் 1

3. அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் கீழான பேரவையின் கடமைகளும் பணிகளும் 1

3.1. பகிரங்க சேவை ஆணைக்குழு 1

3.2. தேசிய பொலிஸ் ஆணைக்குழு 2

3.3. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு 2

3.4. நிதி ஆணைக்குழு 2

3.5. எல்லை நிர்ணய ஆணைக்குழு 2

3.6. தேசிய பெறுகை ஆணைக்குழு 2

4. அரசியலமைப்பின் 41இ உறுப்புரையின் கீழான பேரவையின் கடமைகளும் பணிகளும் 3

4.1. கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்கான நியமனம் 3

5. அரசியலமைப்பு தவிர்ந்த ஏனைய எழுதப்பட்ட சட்டங்களினால் அரசியலமைப்புப் பேரவைக்கு விதிக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதல் 3

5.1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் 3

5.2. தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் 4

5.3 பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம் . 4

6. சபையின் கடமைகள் மற்றும் பணிகளின் செயலாற்றுகை மற்றும் நிறைவேற்றுகை தொடர்பான விதிகளை உருவாக்குதல் 5

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல் 5

1. அறிமுகம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் (இதனகத்துப் பின்னர் 'அரசியலமைப்பு' எனக் குறிப்பிடப்படும்) ஏற்பாடுகளின் கீழ், அரசியலமைப்பினாலும் ஏனைய சட்டங்களினாலும் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கும் ஆற்றுவதற்கும் அரசியலமைப்புப் பேரவைக்கு (இதனகத்துப் பின்னர் 'பேரவை' எனவும் குறிப்பிடப்படும்) அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. 2026 சனவரி முதல் மாச்சு வரையிலான காலப்பகுதியில் பேரவையினால் நிறைவேற்றப்பட்ட மற்றும் ஆற்றப்பட்ட செயற்பாடுகள், அரசியலமைப்பின் 41எ (1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்த அறிக்கையினூடாகச் சமர்ப்பிக்கப்படுகின்றன.

2. பேரவையின் கூட்டங்கள்

மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் அரசியலமைப்புப் பேரவையானது பின்வரும் திகதிகளில் ஆறு (06) தடவைகள் கூடியது:-

2026.01.26, 2026.01.30, 2026.02.03, 2026.02.19, 2026.03.06, 2026.03.19

3. அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் கீழான பேரவையின் கடமைகளும் பணிகளும்

3.1. பகிரங்க சேவை ஆணைக்குழு

2026.03.06 ஆம் திகதி நடைபெற்ற தனது கூட்டத்தில், பகிரங்க சேவை ஆணைக்குழுவில் பதவியிலுள்ள ஆறு (06) உறுப்பினர்களின் பதவிக்காலம் 2026 ஏப்ரல் மாதத்தில் நிறைவடையவுள்ளதென்பதையும், அத்துடன் பகிரங்க சேவை ஆணைக்குழுவில் நிலவும் இரண்டு வெற்றிடங்களுக்காகப் பேரவை பரிந்துரைகளைச் செய்திருந்ததென்பதையும் பேரவை அவதானித்தது.

அதற்கமைய, அரசியலமைப்பின் 41ஆ (1) மற்றும் (3) ஆம் உறுப்புரைகளின் கீழ் பகிரங்க சேவை ஆணைக்குழுவில் ஏற்படவுள்ள வெற்றிடங்களுக்கான நியமனத்திற்காகப் பரிசீலிக்கும் பொருட்டு, தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

3.2. தேசிய பொலிஸ் ஆணைக்குழு

2026.05.16 முதல் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவுள்ள வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

3.3. கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு

2026.01.30 அன்று நடைபெற்ற கூட்டத்தில், கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவில் பதவியிலுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் 2026.03.31 முதல் நிறைவடையவுள்ளதென்பதைப் பேரவை அவதானித்ததுடன், அரசியலமைப்பின் 153அ (1) மற்றும் 41ஆ ஆகிய உறுப்புரைகளின் கீழ் கணக்காய்வுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவுள்ள வெற்றிடங்களுக்காகத் தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியது.

அதற்கமைய, விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமையைத் தொடர்ந்து, விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைகளுக்காகப் பேரவை அழைத்தது.

3.4. நிதி ஆணைக்குழு

2026.05.02 முதல் நிதி ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவுள்ள வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

3.5. எல்லை நிர்ணய ஆணைக்குழு

2026.05.19 முதல் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியில் ஏற்படவுள்ள வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்களைக் கோருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

3.6. தேசிய பெறுகை ஆணைக்குழு

தேசிய பெறுகை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து திரு .டி .ஏ .பியசிறி தாரணகம இராஜினாமா செய்துள்ளமையை அறியத்தரும் வகையில், ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவித்தலைப் பேரவை பரிசீலித்தது.

2026.01.30 அன்று நடைபெற்ற தனது கூட்டத்தில், தேசிய பெறுகை ஆணைக்குழுவில் பதவியிலுள்ள உறுப்பினரின் பதவிக்காலம் 2026.05.02 ஆம் திகதி முதல் நிறைவடையவுள்ளதென்பதையும் பேரவை அவதானித்தது .அதற்கமைய, அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் கீழ் தேசிய பெறுகை ஆணைக்குழுவில் நிலவும் வெற்றிடம் மற்றும் ஏற்படவுள்ள வெற்றிடங்களுக்கான நியமனத்திற்காகப் பரிசீலிக்கும்

பொருட்டு, தகைமை வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

4. அரசியலமைப்பின் 41இ உறுப்புரையின் கீழான பேரவையின் கடமைகளும் பணிகளும்

4.1.கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்கான நியமனம்

அரசியலமைப்பின் 41இ (1) ஆம் உறுப்புரையின் கீழ், சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி திருமதி எல். எஸ். ஐ. ஜயரத்னவை கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்கு நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் பரிந்துரையைப் பேரவை பரிசீலித்தது.

பரிசீலித்ததன் பின்னர், அரசியலமைப்பின் 153 மற்றும் 41இ (1) ஆகிய உறுப்புரைகளின் கீழ், சிரேஷ்ட பிரதி கணக்காய்வாளர் தலைமையதிபதி திருமதி எல். எஸ். ஐ. ஜயரத்னவை கணக்காய்வாளர் தலைமையதிபதி பதவிக்கு நியமிப்பதற்கான கௌரவ ஜனாதிபதியின் பரிந்துரைக்கு, அரசியலமைப்பின் 41இ (1) ஆம் உறுப்புரையின் கீழ் பேரவை அங்கீகாரம் வழங்கியது.

5. அரசியலமைப்பு தவிர்ந்த ஏனைய எழுதப்பட்ட சட்டங்களினால் அரசியலமைப்புப் பேரவைக்கு விதிக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட கடமைகளையும் பணிகளையும் நிறைவேற்றுதல்

5.1. காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவியில் திரு .பராக்கிரம ஜயந்த குமார சில்வா விஜேவன்ச விக்கிரமசிங்கவின் பதவிக்காலம் நிறைவடைந்தமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்காகப் பேரவை விண்ணப்பங்களைக் கோரியதுடன், அதற்கமையச் சுருக்கப்பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளையும் நடாத்தியது.

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் (தாபித்தலும், நிருவகித்தலும், பணிகளை நிறைவேற்றுதலும்) சட்டத்தின் 4 (2) ஆம் பிரிவின் கீழான தேவைகளைக் கருத்திற்கொண்டும், நேர்முகப்பரீட்சைகளின் போது விண்ணப்பதாரர்களின் செயலாற்றுகையைக் கருத்திற்கொண்டும், பேரவையானது,

மேற்படி சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் பதவியில் ஏற்பட்டுள்ள வெற்றிடத்திற்கு நியமிப்பதற்காக திருமதி புண்ணியமூர்த்தி ஜெயதீபாவை பரிந்துரைக்கின்றது.

5.2.தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து திரு. லியன ஆரச்சிலாகே ஜகத் பண்டார லியன ஆரச்சி அவர்கள் பதவி விலகியமை குறித்து ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவித்தலைச் சபை பரிசீலித்தது.

எனவே, பேரவையானது, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 12 (1) (இ) பிரிவின் பிரகாரம், ஏனைய சிவில் சமூக அமைப்புகள் என்ற வகையிலிருந்து மேற்படி வெற்றிடத்தை நிரப்புவதற்காகப் பரிந்துரைகளைக் கோரியதுடன், அதற்கமைய, பரிந்துரைக்கப்பட்டவர்கள் பேரவையினால் நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

பேரவையானது, விண்ணப்பதாரர்களின் தகைமைகள் மற்றும் பொருத்தப்பாடு ஆகியவற்றுடன், ஆணைக்குழுவின் கட்டமைப்பில் பன்முகத்தன்மை வாய்ந்த பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தையும் கருத்திற்கொண்டு, 2026.02.01 முதல் திரு . ஜகத் பண்டார லியன ஆரச்சி அவர்களின் பதவி விலகலினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் 12 (1) (இ) ஆம் பிரிவின் பிரகாரம், தகவலுக்கான உரிமைக்கான ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு திருமதி வாசுகி ஜெயசங்கரைப் பரிந்துரைத்தது.

5.3 பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கான நியமனம்

2026.02.12 முதல் கலாநிதி ரமணி தேவிகா ஜயசுந்தர அவர்களின் பதவி விலகலினைத் தொடர்ந்து, பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவின் முழுநேர உறுப்பினர் மற்றும் தவிசாளர் பதவியில் நிலவும் வெற்றிடத்தைக் குறிப்பிட்டு, ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து கிடைக்கப்பெற்ற அறிவித்தலைச் சபை பரிசீலித்தது.

அதற்கமைய, 2024 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பெண்களின் வலுவூட்டல் சட்டத்தின் 5 (2) மற்றும் 5 (3) ஆம் பிரிவுகளின் பிரகாரம், முகாமை மற்றும் நிர்வாகத் துறையில் அனுபவமும் சிறப்பும் வாய்ந்த, ஆர்வமுள்ள நபர்களிடமிருந்து மேற்படி வெற்றிடத்தை

நிரப்புவதற்கான விண்ணப்பங்கள்/பரிந்துரைகளைக் கோருவதற்குப் பேரவை தீர்மானித்தது.

6. சபையின் கடமைகள் மற்றும் பணிகளின் செயலாற்றுகை மற்றும் நிறைவேற்றுகை தொடர்பான விதிகளை உருவாக்குதல்

அரசியலமைப்பின் 41எ (3) ஆம் உறுப்புரையினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், பேரவையானது தனது கடமைகள் மற்றும் பணிகளின் செயலாற்றுகை மற்றும் நிறைவேற்றுகை தொடர்பான வரைவு விதிகளை மறுபரிசீலனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

7. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரிக்கைகளுக்குப் பதிலளித்தல்

மதிப்பாய்விற்கு உட்பட்ட காலப்பகுதியில், 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவலுக்கான உரிமைச் சட்டத்தின் கீழ் பின்வரும் எண்ணிக்கையிலான தகவல் கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றதுடன், குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதில்கள் அனுப்பப்பட்டன:

கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளின் எண்ணிக்கை	2
முழுமையாக அல்லது பகுதியாகத் தகவல் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	1
மறுக்கப்பட்ட அல்லது நிராகரிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	1
மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	2
பதிலளிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	0
நிராகரிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை	2